# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No. 454/2016** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 12 (PW– 12 )** |
| **பெயர்** | :– | **செங்குட்டுவன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

02, 04, 05, 07, 08, 09, 15 – ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 03, 06, 10, 11, 12, 14 –ஆம் எதிரிகள் தோன்றவில்லை மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது சேலம் அம்மாபேட்டையில் வசிக்கிறேன். நான் கடந்த 08.08.2012-ஆம் தேதியன்று 20.30 மணிக்கு இரும்பாலை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சேலம் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் இருந்து வந்த இரும்பாலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சின்னாயூர் ஊரை சேர்ந்த சின்னதுரை மகன் சித்தையன் என்பவரின் புகாரை பெற்று நிலைய குற்ற எண் 301/2015 இல் இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 147, 148, 341, 294(B), 323, 324, 427, 506(பகுதி 2) ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டிக்கதக்க குற்றங்களுக்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையை **அ.சா.ஆ-06** ஆக குறியீடு செய்யப் படுகிறது. அசலை அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். ஒரு படியை புலனாய்விற்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் முதல் வரிசையில் நாள் என்ற இடத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 11.08.2015-ஆம் தேதியன்று அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 04-ஆம் வரிசையில் புகார் மனு என்று மட்டும்தான் உள்ளது. காவல் ஆணையர் அலுவலகத்தில் இருந்த புகார் மனு என்று சொல்லப்படவில்லை. புகாரில் அந்த புகார் காவல் ஆணையர் அலுவலகத்தில் இருந்து வந்தது என்று காட்ட அல்லது புகார் அங்கு கொடுக்கப் பட்டது என்று காட்ட அதில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

நான் மருத்துவமனைக்கு சென்று யாரிடமும் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை.

இந்த வழக்கின் 01-ஆம், 03-ஆம் எதிரிகளை சான்றாளர்கள் சித்தையன், ஐயனார் ஆகியோர் தாக்கியதாக மேற்சொன்ன இரு எதிரிகளும் மருத்துவமனையில் இருந்தபோது அங்கிருந்து தகவல் கொடுக்கப்பட்டு புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சான்றாளர்கள் சித்தையன், ஐயனார் ஆகியோர்கள்தான் உண்மையில் பிரச்சனை செய்தனர் என்றும் எதிரிகள்மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,

Additional District&Session Judge,
Salem.